மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 60/2019

பெயர் – சங்கரலிங்கம் (பி.வா.சா.1)

நாள் – 03.02.2023

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தந்தை வழி தாத்தாவான சங்கரலிங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்களில் வாதி, பிரதிவாதிகளுக்கு பங்கு உள்ளது என்றால் பங்கு கொடுத்துவிட்டோம். யாருக்கு என்ன சொத்து கொடுக்கப்பட்டது என்றால் எனக்கும், எனது அண்ணனுக்கும் தான் பங்கு உண்டு. யாருக்கும் கிடையாது. 2வது அயிட்ட சொத்தை பொருத்து தாக்கல் செய்யப்டிருக்கும் ஆவணம் பதிவுசெய்யப்பட்ட ஆவணம் கிடையாது என்றாலும் அது பூர்வீகமாக சங்கரலிங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் சரிதான். தாவா 2வது அயிட்ட சொத்து சங்கரலிங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அவர் தனிப்பட்ட முறையில் எனக்கு எழுதிக்கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 4 ஆவணம் சட்டப்படியான செல்லதகுந்த ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல. எனது பெயரில் பட்டா எதுவும் மாறியுள்ளதா என்றால் மாறியுள்ளது. பி்வா.சா.ஆ.4 ஆவணம் சட்டப்படி செல்லதகாத ஆவணம் என்பதால் எனக்கு பட்டா எதுவும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. நா்ன் தாக்கல் செய்திருக்கும் ரசீதுகள் எனது சொத்துக்கு ஆனது கிடையாது என்றால் சரியல்ல. வீட்டுவரி, ரசீதுகள் எந்த சொத்துக்காக என்பதுபற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணமான தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் பி.வா.சா.ஆ.6 ஆவணமான சம்மத ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். அதனால் தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணமான 3 வது அயிட்ட சொத்தை பொறுத்த கிரைய ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். பதிவு செய்யாத ஆவணம் என்பதால் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை வாய்மொழி கிரையமாகத்தான் ஏற்றுக்கொள்ளமுடியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. தாவா 1 மற்றும் 2 இலக்க சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாக இருப்பதால் அதனை பொறுத்து ஏற்படடுத்தப்பட் அனைது ஆவணங்களும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல

என்றாலும் அவைகள் எனக்கு எந்த விதமான தனிப்பட்ட உரிமையும் கொடுக்காது என்றால் சரியல்ல. எனவே தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களில் வாதிக்கு 1/9 பாகம் உள்ளது என்றால் சரியல்ல. 3 வது அயிட்ட சொத்தை பொறுத்து நானும், வாதியும் தனிதனியாக பிரித்து வீடு கட்டியுள்ளோம் என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.5 ஆவணம் 3 வது அயிட்ட சொத்தில் எனக்கு கிழக்கு பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுவும் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். ஆனால் பட்டா உள்ளது. அந்த பட்டா எதையும் தாக்கல் என்றால் தாக்கல் செய்துள்ளேன். 3 வது அயிட்ட சொத்தின் மேற்கு பகுதியை அதே தேதியில் சண்முகசெட்டியார் வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதனால் 3 வது அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதிக்கும் எனக்கும் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு மட்டும்தான் பங்கு உண்டு. இந்த வழக்கில் வாரிசு விவரங்கள் பற்றி சொல்லியுள்ளது சரிதான். அதனால் பிராது பற்றி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.